# பொதுப் பாதையில் இருந்த வர்த்தகப் பொருட்களை மாநகர் மன்றம் பறிமுதல் செய்தது!



**(நமது நிருபர்)**

கோலாலம்பூர், பிப்.16–

தலைநகரில் அனுமதியின்றிப் பொதுப் பாதையில் வைக்கப்பட்ட நாற்காலிகள், மேசைகள், இதர பொருட்களை கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அமலாக்கத் துறையும் தித்திவங்சா கிளை அலுவலகமும் இணைந்து பறிமுதல் செய்தன.

டேசா பாண்டான், ஜாலான் 2/76சி மற்றும் ஜாலான் சுல்தான் அஸ்லான் (ஜாலான் ஈப்போ) பகுதிகளில் 1974 சாலை, வாய்க்கால் மற்றும் கட்டடச் சட்டத்தின் கீழ் 3 பறிமுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக மாநகர் மன்றம் தெரிவித்தது.

இதில் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களில் பிளாஸ்டிக் மேசை–நாற்காலிகள், முகாம்கள், இதர கருவிகள் ஆகியவை அடங்கும்.

அனைத்துப் பொருட்களும் செராஸ், தாமான் மிஹார்ஜா, ஜாலான் லொம்போங்கிலுள்ள பறிமுதல் கிடங்கிற்கு பதிவு மற்றும் ஆவணப்படுத்தலுக்காகக் கொண்டு செல்லப்பட்டதாக முகநூலில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.